[1978 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒழுங்குப் பிரச்சினை

ஓர் உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவுபெரு அலுவலர் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுவது பற்றி

திரு. மு. அம்பிகாபதி : ஓர் ஒழுங்குப் பிரச்சினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 ஆம் தேதி காலையில் 11 மணிக்கு என்னைப் பார்ப்பதற்காக என்.ஜி. ஓ. யூனியனைச் சேர்ந்த ரவிசெல்வம் , ஜெகந்நாதன் ஆகியோர் வந்திருக்கிறார்கள். அவர்களைக் கோட்டைக் காவலர்கள் கைது செய்து வெளியே நிறுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மீது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. அம்பிகாபதி அவர்கள் எந்த அடிப்படையில் இதைப் பற்றி சொல்லுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். விதியின் அடிப்படையில் எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். இதை ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்ப வேண்டாம். எழுதி அனுப்புங்கள்.

திரு மு. அம்பிகாபதி : இது என்னுடைய உரிமைப் பிரச்சினை. என்னைப் பார்க்க வந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். உட்காருங்கள்.

(3) அமைச்சரின் அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. பாலகிருஷ்ணன், செ. சிவசாமி, கிருஷ்ணன், எம். அண்ணாமலை, என். பழனிவேல் ஆகிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேரவையின் விதி 42-ன் கீழ் எழுப்பியுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்ககோரிய அந்தத் தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டு மறு

படியும் அது பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க விதி 82-ன் கீழ் இந்த அறிக்கையை நான் அளிக்கிறேன்.

1–4–70-க்குப் பின்னர் அரசினர் 'பி' பிரிவு உயர்நிலைப்பள்ளியில் நேரிடையாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்கள் முதல் நிலை தமிழாசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் அரசாணை எண்கள் 325–கல்வி, நாள் 25–2–72, 1724, கல்வி நாள் 28–10–72 மற்றும் 63–கல்வி, நாள் 17–1–74-இன்படி முதல்நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து முதல்நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல் நிலைத் தமிழாசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கத் தேவையில்லையென்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல்நிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தேதியில் (முதல்நிலை தமிழாசிரியர் பணியில்) வரன்முறை செய்யலாமென்று அரசு குறிப்பாணை எண். 5471/பி2/76-9 கல்வி நாள் 17–8–76 ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல் நிலைத் தமிழாசிரியர்கள் யாவருக்கும் பணி வரன் முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஸ்தல ஸ்தாபன நிலை விதிகளில் (Statutory Rules) வயது வரம்பு இல்லாததால் 1–4–70 க்குப் பின் ஒரு சில 30 வயதிற்கு மேற்பட்டவர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியில் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்களை இரண்டாம் நிலைத தமிழாசிரியர் பணியில் 21–3–74-இல் தான் வரன்முறை செய்யப்பட வேண்டுமென்று அரசாணை எண். 765 கல்வி, நாள் 16–5–74 ல் ஆணையிடப்பட்டது. ஆனால் இவ்வாசிரியர்கள் 16 பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி 25–2–71, 28–10–73 மற்றும் 1–1–74 ஆகிய தேதிகளில், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழாசிரியர் பணிக்கு, பதவி உயர்வு அளிக்கப்பட்டு விட்டனர்.

எனவே இவ்வாசிரியர்களை முதல்நிலைத் தமிழாசிரியர் பணியில் அரசு குறிப்பாணை எண். 5471/பி2/76-9 கல்வி நாள் 17–8–76-ன் படி இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழாசிரியர் பணிக்கு பதவி உயர்வு, அளிக்கப்பட்ட தேதியில் வரன் முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது சரியல்ல என்றும் 21–3–74 லிருந்து தான் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்றும் அரசு குறிப்பாணை எண். 89091/பி2-77-2 கல்வி, நாள் 27-9–77-இல் ஆணையிடப்பட்டது.

 இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 13

ஆகையால் அரசு குறிப்பாணை எண். 89021/பி2/77-2 கல்வி, நாள் 27-9-77-ன்படி வயது வரம்பு மீறியவர்களுக்கு ஏற்கனவே பணி வரன்முறை செய்து பிறப்பித்த ஆணையை ரத்து செய்தும், அவர்கட்கு வழங்கப்பட்ட அதிக உயர்வுத்தொகையை பிடித்தம் செய்யும்படி ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வி இயக்குனரின் செயல் முறைகள் ந. க. எண். 196976/பி1/72, நாள் 6–10–72-ல் கண்டுள்ள உத்திரவின்படி 40 வயது வரை வரம்பு விதியினைத் தளர்த்துவது, ஆரம்பப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் பி. டி. பட்டதாரிகளானாலும் முதல்நிலைத் தமிழாசிரியர் பதவிக்குத் தகுதி பெற்றிருந்தாலும் ஐந்து ஆண்டுகள் ஆசிரியப் பணி புரிந்திருந்தால் அவர்கள் மற்றவைகளில் அப்பதவிக்குத் தகுதியுடையவரெனத் தேர்வாணைக் குழுவினால் கருதப்பட்டு தேர்ந்து எடுக்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும். தமிழாசிரியர்களைத் பொதுப்பணித் தேர்வாணைக் குழுவினால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே மேற்படி ஆணை பொருந்துமே தவிர முதல்நிலைத் தமிழாசிரியராக பதவி உயர்வு பெற இவ்விதி பொருந்தாது.

பள்ளிக் கல்வி இயக்குனரின் பரிந்துரையை ஏற்று 'பி' பிரிவில் பணியாற்றி பதவி இறக்கத்திற்குள்ளான இப்பதின்மூன்று தமிழாசிரியர்களையும் இராமநாதபுரம் மாவட்ட 'ஏ' பிரிவு பள்ளிகளில் தமிழாசிரியர்களாக நியமனம் செய்ய 10–3–78 நாளிட்ட அரசாணை எண். 456-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

[முற்பகல் 10-00]

4. கவனஈர்ப்பு.

கோவை, பல்லடம் அவினாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச் செடியால் மனிதர்களுக்கும் பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து.

திரு. எஸ். என். பழனிச்சாமி: தலைவர் அவர்களே, கோவை நகரத்தைச்சுற்றி விஷச் செடி பெருகி தற்போது பூக்கள் தோன்ற ஆரம்பித்த நிலையில் கோவை, பல்லடம், அவினாசி பகுதிகளுக்கு அதன் விஷக்காற்று பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.